# இலங்கையில் கருத்து வேறுபாட்டின் அடக்குமுறை

**22 நொவம்பர் 2014 - 31 ஜனவரி 2015**
**ஜனாதிபதி தேர்தல் பரப்புரை**



தேர்தல் பிரச்சாரத்தின் போது, கருத்துச் சுதந்திரத்தின் அடக்குமுறையையிட்டு இதழியலாளர்களும், தொழிற்சங்கவாதிகளும் மற்றும் மனித உரிமைக் காவலர்களும் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர் (12 Dec 2014 Vikalpa Photo)


**INFORM** Human Rights Documentation Centre
www.ihrdc.wordpress.com informcolombo@gmail.com

## உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள்

இந்த இதழ் நொவம்பர் 22இலிருந்து ஜனவரி 31 வரையிலான காலத்தை உள்ளடக்குவதுடன், பின்வரும் துணை வகுதிகளின் கீழ் ஜனாதிபதி தேர்தல் தொடர்பான வன்முறையையிட்டு அறிக்கையிடப்பட்டவற்றின் சிலவற்றைப் பதிவுசெய்கின்றது.

**அ. கொலைகள், துப்பாக்கிச்சூடுகள், தாக்குதல்கள்**

**ஆ. மரண அச்சுறுத்தல்கள் மற்றும் வேறு அச்சுறுத்தல்கள்**

**இ. வதிவிட இடங்களினதும், கட்சி அலுவலகங்களினதும், வியாபாரத் தாபனங்களினதும், வாகனங்களினதும் மீதான தாக்குதல்கள்**

**ஈ. ஒன்று கூடுவதற்கான சுதந்திரத்தையும், கருத்துச் சுதந்திரத்தையும் மீறுதல்**

**உ. வாக்குச்சாவடி முகவர்களுக்கும், தேர்தல் கண்காணிப்பாளர்களுக்கும் தாக்குதல்கள், அச்சுறுத்தல்கள் மற்றும் கட்டுப்பாடுகள்**

*INFORM was established in 1990 to monitor and document human rights situation in Sri Lanka, especially in the context of the ethnic conflict and war, and to report on the situation through written and oral interventions at the local, national and international level. INFORM also focused on working with other communities whose rights were frequently and systematically violated. Presently, INFORM is focusing on election monitoring, freedom expression and human rights defenders. INFORM is based in Colombo Sri Lanka, and works closely with local activists, groups and networks as well as regional (Asian) and international human rights networks*

## சாராம்சம்

பாரிய அளவிலான கருத்து வேற்றுமையின் அடக்குமுறையைக் கண்ட ஓர் ஆண்டாக 2014 விளங்கியது. நொவம்பர் 22 அன்று, அப்போதைய ஜனாதிபதியினால் விடுக்கப்பட்ட வேண்டுகோள் ஒன்றின் மீதான அடிப்படையில், 2015 ஜனவரி 8 அன்று ஜனாதிபதி தேர்தல்கள் நடத்தப்படும் என தேர்தல்கள் ஆணையாளர் அறிவித்தார். ஒரு சில நாட்களுக்கு முன், ராஜபக்ஷவின் சுகாதார அமைச்சரும், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளருமான திரு.மைத்திரிபால சிறிசேன, தேசிய ஜனநாயக முன்னணியைப் பிரதிநிதிப்படுத்தி "பொது எதிரணி வேட்பாளராக" ஜனாதிபதி தேர்தல்களில் போட்டியிடவுள்ளதாக அறிவித்தார்.

அது முதல், ஆளும் ஐக்கிய பொதுசன சுதந்திர முன்னணியிலிருந்து (ஐ.பொ.ஐ.மு.) பெருமளவு அரசியல்வாதிகள் கட்சி மாறியதுடன், சிறிசேனவுக்கு ஆதரவளிப்பதாகவும் வாக்குறுதி அளித்தனர். பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி (ஐ.தே.க.), சிறிய ஆனால் சிங்கள - பௌத்த மக்களுடன் செல்வாக்கினைக் கொண்ட கட்சிகளான ஜாதிக ஹெல உறுமய (ஜா.ஹெ.உ.) மற்றும் ஜனநாயகக் கட்சி (ஜ.க.) ஆகியனவும் சிறிசேனவுக்காக ஆதரவளிப்பதாக வாக்குறுதி அளித்தன. கிராமிய சிங்கள பௌத்தர்களில் செல்வாக்கு செலுத்துகின்ற ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) வாய்மொழியிலாகவும், தொடர்ச்சியாகவும் ராஜபக்ஷ ஆட்சியை விமர்சித்தவாறு வெளிப்படையாகவே சிறிசேன முகாமுக்கு பயனுறுதிவாய்ந்ததாக ஆதரவளித்தது. பின்னர் சிறுபான்மையினரைப் பிரதிநிதிப்படுத்தும் இரு பிரதான கட்சிகளான ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் (ஸ்ரீ.ல.மு.கா.) மற்றும் தமிழர் தேசியக் கூட்டமைப்பு (த.தேகூ.) ஆகியனவும் தமது ஆதரவை சிறிசேனவுக்கு அளித்தன. வழக்கறிஞர்கள், கல்விமான்கள், கலைஞர்கள், இதழிலாளர்கள், செல்வாக்குமிக்க பௌத்த மற்றும் கிறிஸ்தவ மதகுருமார் ஆகியோரும், அரச சார்பற்ற தாபனங்களின் பிரதிநிதிகளும் சிறிசேனவின் பிரச்சாரத்திற்கு இரகசியமாகவும், வெளிப்படையாகவும் ஆதரவளித்தனர்.

இவ்வாறாக, தமது பிரச்சாரத்திற்கு ஆதரவளிப்பதற்காக அரசாங்க ஊடகங்களுடனும், அரசாங்க வளங்களுடனும், இராணுவ, பொலிஸ் மற்றும் வேறு அரசாங்க நிறுனங்களுடனும் ராஜபக்ஷ முகாம் விடப்பட்டது. ராஜபக்ஷ முகாமினால் அரசாங்க வளங்களின் பரந்தரீதியிலான உபயோகத்தையும், துஷ்பிரயோகத்தையும் இவ்வறிக்கை உள்ளடக்கவில்லை. ஆனால், இது தேர்தல்கள் அறிவிக்கப்பட்ட நேரத்திலிருந்து எதிரணி அரசியல் அரசியல்வாதிகளுக்கும், அவர்களது ஆதரவாளர்களுக்கும் மற்றும் நூற்கல்வியாளர்களுக்கும், கலைஞர்களுக்கும், மனித உரிமைக் காவலர்களுக்கும், இதழியலாளர்களுக்கும் கருத்து வேற்றுமையின் அடக்குமுறை மீது நோக்கினைக் கொண்டுள்ளது. பிரதான எதிரணி வேட்பாளரும், அவரது இரு மிகவும் உயர்வான புறவரையிலான ஆதரவாளர்களும், எதிர்க்கட்சித் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியும் தாக்கப்பட்டார்கள். குறைந்தபட்சம் தேர்தல் தொடர்பான வன்முறையில் இருவர் கொல்லப்பட்டதுடன், பெருமளவானோர் காயமடைந்தனர். எதிரணி அரசியல்வாதிகளுக்கும், அவரது ஆதரவாளர்களுக்கும் சொந்தமான கட்சி அலுவலகங்கள், வீடுகள், வியாபாரத் தாபனங்கள் மற்றும் வாகனங்கள் ஆகியன மீது ஒரு தொகையிலான தாக்குதல்கள் இடம்பெற்றன. வாக்குச்சாவடி முகவர்களும், தேர்தல் கண்காணிப்பாளர்களும் தாக்கப்பட்டதுடன், அச்சுறுத்தப்பட்டனர். சிரேஷ்ட இதழிலாளர்களும் விசாரணைக்கும், மரண அச்சுறுத்தல்களுக்கும் உட்பட்டனர். பொது எதிரணி வேட்பாளருக்கு ஆதரவளித்த கலைஞர்கள் மற்றும் மனித உரிமைக் காவலர்கள் ஆகியோரும் தாக்கப்பட்டு, அச்சுறுத்தப்பட்டனர்.

தேர்தல் வன்முறையில் பாதிக்கப்பட்ட அதிகளவு பெரும்பான்மையினர் பொது எதிரணி வேட்பாளரின் ஆதரவாளர்களாவர். பொது எதிரணி வேட்பாளரின் வெற்றியின் பின்னர் தேர்தல் வன்முறையின் பாங்கு அதிகளவில் மாற்றமடைந்தது. தேர்தலின் பின்னரான நாட்களில் தோல்வியுற்ற வேட்பாளரான முன்னாள் ஜனாதிபதி ராஜபக்ஷவின் உயர் புறவரையிலான ஆதரவாளர்கள் மரண அச்சுறுத்தல்கள், பயமுறுத்தல், வன்முறை, ஊழல் மற்றும் வேறு முறைகேடான செயல் ஆகியவற்றையிட்டு முறைப்பாடு செய்தனர். இவர்களில் பாராளுமன்ற உறுப்பினராகவும் விளங்கும் ஜனாதிபதியின் மகனும் உள்ளடங்குகின்றார். ஜனாதிபதி ராஜபக்ஷவின் ஆதரவாளர்கள் தாக்கப்பட்டனர், அவர்களது ஆதனங்களும் தாக்கப்பட்டன. வழக்கறிஞர்களினதும், சிவில் சமூகத்தினதும் கிளர்ச்சி சில வாரங்களினுள் ராஜபக்ஷ ஆட்சியின் கீழ் அரசியலமைப்புக்கு மாறாக குற்றப்பிரேரணை கொண்டு வரப்பட்ட 43ஆவது பிரதம நீதியரசரைப் பதவியில் மீள அமர்த்துவதற்கு இட்டுச்சென்றது.

தேர்தல்களின் பின்னர் வடக்கில் தமிழ் செயற்பாட்டாளர்களை வேட்டையாடும் அங்கொன்றும் இங்கொன்றுமான சம்பவங்கள் அறிக்கையிடப்பட்டிருந்தன. ஆனால், முழு அளவில், ஜனவரியின் இறுதிப் பகுதியில், 2014உடன் ஒப்பிடுகையில் கருத்து வேற்றுமையின் அடக்குமுறையின் சம்பவங்களின் அறிக்கைகள் கணிசமானளவு குறைந்திருந்தன.




CMEVஇனால் வன்முறைக்கு எதிரான சுவரொட்டி

## அ. கொலைகள், துப்பாக்கிச்சூடுகள், தாக்குதல்கள்

**1.** 11 ஜனவரி: **தே.ஜ.மு. ஆதரவாளர் தாக்கப்பட்டார்**

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆதரவாளர் ஒருவர் தாக்கப்பட்டார். பாதிக்கப்பட்டவரான திரு.ஜெயரத்தினத்தின் கூற்றுப்படி, கூரிய கத்தியொன்றைப் பயன்படுத்தி தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களைக் கொண்ட குழுவொன்று அவரது கையை வெட்டி, திரு.சிறிசேனவின் ஆதரவாளர்கள் யார் எனக் கேட்டுள்ளது. (CMEV)

**2.** 11 ஜனவரி: **ஐ.தே.க. வாகனத் தொடரணி தாக்கப்பட்டது**

கண்டியைச் சேர்ந்த பாத்ததும்புரவில், ஐக்கிய தேசியக் கட்சியின் (ஐ.தே.க.) உள்ளூர் தலைவர் எ.ஜி.விஜேதுங்க தலைமையிலான வாகனத் தொடரணியொன்றின் மீது தாக்குதலொன்று இடம்பெற்றது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உரையாற்றிய கூட்டமொன்றிலிருந்து வாகனத் தொடரணி வெளியேறிய போது அது தாக்கப்பட்டது. திரு.விஜேதுங்கவின் கூற்றுப்படி, ஐக்கிய பொதுசன சுதந்திர முன்னணி (ஐ.பொ.சு.மு.) பிரதேச சபை உறுப்பினரின் சுமார் 30 ஆதரவாளர்கள் 'பஸ்'ஸை நிறுத்தி, அதைத் தாக்கினார்கள். ஜம்புகஸ்பிட்டிய வைத்தியசாலையில் 9 தனிப்பட்டவர்கள் அனுமதிக்கப்பட்டதுடன், அவர்கள் பின்னர் பேராதனை வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டார்கள். பொலிஸ் முறைப்பாடொன்று CIB 11169/130இன் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது. வத்தேகம பொலிஸ் நிலையத்தின் கூற்றுப்படி, மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், பேராதனை வைத்தியசாலையில் 8 பேர் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்தனர். (CMEV)

**3.** 10 ஜனவரி: **மோதலில் ஒரு ஐ.தே.க. ஆதரவாளர் கொல்லப்பட்டார், மூவர் காயமடைந்தனர்**

பங்கதெனியவிலிருந்து கும்புட்டுகுளியவுக்கு வர்ணகுலசூரிய மஞ்சுள பிரசன்ன உட்பட ஆறு ஐ.தே.க. ஆதரவாளர்கள் பிற்பகல் 1.50 மணியளவில் வாகனத்தில் சென்று, ஐ.பொ.சு.மு. ஆதரவாளரான ஜே.ஆர்.சரத் மற்றும் அவரது மகன் ஆகியோரைச் சந்தித்துள்ளனர். இரு தரப்புகளுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டுள்ளதுடன், இதில் மஞ்சுள பிரசன்னவின் தலையில் காயங்கள் ஏற்பட்டன. அவர் பின்னர் காயங்களின் காரணமாக மரணமடைந்ததுடன், அன்றைய தினமே சிலாபம் ஆதார வைத்தியசாலையில் அவர் இறந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது. (CMEV)

**4.** 10 ஜனவரி: **ஐ.பொ.சு.மு. ஆதரவாளரின் குடும்பம் தாக்கப்பட்டது**

ஐக்கிய பொதுசன சுதந்திர முன்னணி (ஐ.பொ.சு.மு.) ஆதரவாளர் சுனித் குணசேகரவின் வதிவிடத்திற்கு 10 - 12 வாகனங்கள் ஓட்டிச்செல்லப்பட்டதுடன், அவரது மனைவியும், தாயும் தாக்கப்பட்டனர். ஜா-எல பொலிஸ் நிலையத்தில் CIB III 107/135இன் கீழ் பொலிஸ் முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், அதில் சந்தேக நபராக ஐக்கிய தேசியக் கட்சி (ஐ.தே.க.) நகர சபை உறுப்பினர் அன்ஜூ அடையாளங் காணப்பட்டுள்ளார். (CMEV)

**5.** 08 ஜனவரி: **இரு பெண்கள் தாக்கப்பட்டனர்**

ஜனவரி 8 அன்று பிற்பகல் 1.00 மணியளவில் யட்டியன கனிஷ்ட பாடசாலைக்கு (வாக்களிப்பு நிலையம் இல:15) அருகில் இரு பெண்களை ஐ.பொ.சு.மு. பிரதி அமைச்சர் சரண குணவர்தனவும், அவரது ஆதரவாளர்களைக் கொண்ட குழுவினரும் தாக்கினர். பகுதியிலும், பகுதியைச் சுற்றியும் பிரதி அமைச்சர் குணவர்தனவும், அவரது ஆதரவாளர்களைக் கொண்ட குழுவினரும் 7 வாகனங்களில் பிரயாணம் செய்ததாகவும் அறிக்கையிடப்பட்டுள்ளது. (CMEV)

**6.** 08 ஜனவரி: **ஸ்ரீ.ல.மு.கா. உறுப்பினர் தாக்கப்பட்டு, அச்சுறுத்தப்பட்டார்**

அக்கரைப்பற்றில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் திரு.தல்ஹாவை அமைச்சர் எ.எல்.எம்.அதாவுல்லாவின் (தேசிய காங்கிரஸ்) ஆதரவாளர்கள் தாக்கியதுடன், அவரை அச்சுறுத்தியுமுள்ளனர். இது தொடர்பில் திரு.தல்ஹா பொலிஸ் முறைப்பாடொன்றைச் செய்துள்ளார். (CMEV)

**7.** 07 ஜனவரி: **துப்பாக்கிச் சூட்டு காயங்களினால் தே.ஐ.மு. ஆதரவாளர் மரணமானார்**

வாக்களிப்புக்கு முந்திய தினமானது 2015இன் ஜனாதிபதித் தேர்தலின் முதலாவது துர்மரணத்திற்கு சான்றுபகர்கின்றது. ஜனவரி 5 திங்கட்கிழமை காலையில் இரத்தினபுரியைச் சேர்ந்த கஹவத்தையில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமொன்றில் கடுமையாக காயமடைந்த திரு.சாந்த தொடகங்கொட, இரத்தினபுரி வைத்தியசாலையில் பிற்பகல் 3.05 மணிக்கு மரணமானார். ஜனவரி 5 அன்று மின் சக்தி பிரதி அமைச்சர் பிரேமலால் ஜயசேகர, அமைச்சர் நிலாந்த ஜயக்கொடி மற்றும் பிரதேச சபைத் தலைவர் வஜிர தர்ஷன டீ சில்வா ஆகியோரைக் கைதுசெய்வதற்கான பிடியாணையொன்றைப் பெல்மதுளை நீதவான் நீதிமன்றம் வழங்கிய போதிலும், 7ஆம் திகதியில் உள்ளவாறு எவ்வித கைதுகளும் இடம்பெறவில்லை. (CMEV)

**8.** 05 ஜனவரி: **துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் மூவர் காயமடைந்தனர்**

பொது ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன உரையாற்றவிருந்த கூட்டமொன்றுக்காக மைதானத்தை தயார்படுத்திக்கொண்டிருந்த ஐக்கிய தேசியக் கட்சி (ஐ.தே.க.) ஆதரவாளர்கள் அடையாளங் காணமுடியாத குழுவொன்றினால் சுடப்பட்டார்கள். பொலிஸ் பொறுப்பதிகாரி எல்.பி.கே.ராஜமந்திரியின் கூற்றுப்படி, டி.ஐ.டபிள்யு.கருணாதாச ரணசிங்க, எச்.ஹூசேன் துல்ஷான் மற்றும் சாந்த தொடங்கொட ஆகிய காயமடைந்த மூன்று பேரும் இரத்தினபுரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றனர். (CMEV)

**9.** 05 ஜனவரி: **ஐ.தே.க. உறுப்பினர் தாக்கப்பட்டார்**

ஜனவரி 5 அன்று ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் ஒருவரான திரு.வஜிர மனோஜ் என்பவர் தாக்கப்பட்டதுடன், அவர் பின்னர் சிலாபம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். வைத்தியசாலைப் பொலிசாருக்கான தனது வாக்குமூலத்தில், ஆரச்சிக்கட்டுவ சந்தைக்கு அருகில் ஐ.பொ.சு.மு. ஆரச்சிக்கட்டுவ பிரதேச சபைத் தலைவரின் சாரதியினால் தான் தாக்கப்பட்டதாக திரு.மனோஜ் குறிப்பிட்டிருந்தார். (CMEV)

**10.** 05 ஜனவரி: **தே.ஐ.மு. அலுவலகத்தில் நபர்கள் அச்சுறுத்தப்பட்டனர்**

"பிள்ளையான்" எனவும் அறியப்படும் த.ம.வி.பு. தலைவர் திரு.சந்திரகாந்தன் மட்டக்களப்பைச் சேர்ந்த வாழைச்சேனையில் உள்ள கருவன்கேணி கலைவாணி வீதியில் அமைந்துள்ள தே.ஐ.மு. அலுவலகமொன்றில் மக்களை அச்சுறுத்தியுள்ளார். அறிக்கைகளின் பிரகாரம், தே.ஐ.மு.ஐச் சேர்ந்த திரு.பி.சுலக்ஷனையும் கொலைசெய்யப் போவதாக அவர் அச்சுறுத்தியுள்ளார். அச்சுறுத்தல்களைப் பிள்ளையான் விடுத்திருந்த வேளையில் அவர் துப்பாக்கியொன்றைத் தன்னுடன் வைத்திருந்ததாக CMEVக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (CMEV)

**11.** 05 ஜனவரி: **ஐ.பொ.சு.மு. பிரச்சார அமைப்பாளர் கத்தியால் குத்தப்பட்டார்**

கோப்பாயில் நாவலர் பாடசாலைக்கு அருகில் ஐ.பொ.சு.மு. அமைப்பாளர் திரு.ஆறுமுகம் சந்திரகுமார் (38 வயது) இரு அறியப்படாத தனிப்பட்டவர்களினால் கத்தியால் குத்தப்பட்டார். ஜனவரி 5 அன்று இரவு 9.20 மணியளவில் பின்புறத்திலும், கையிலும் கத்திக்குத்துக் காயங்களை திரு.சந்திரகுமார் அடைந்தார். கோப்பாய் பொலிஸ் பொறுப்பதிகாரி திரு.ஐ.பி.ஜயக்கொடியின் கூற்றுப்படி, கோப்பாய் வைத்தியசாலைக்கு திரு.சந்திரகுமார் கொண்டுசெல்லப்பட்டு, பின்னர் அறுவைச் சிகிச்சைக்காக இரவு 10.05 மணிக்கு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டார். (CMEV)

**12.** 28 டிசம்பர் 2014: **எதிரணி ஆதரவாளர்கள் கடத்தப்பட்டு, தாக்கப்பட்டனர்**

பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் ஆதரவாளர்களைக் கொண்ட குழுவொன்று மட்டக்களப்பு, சிவானந்தா மைதானத்திற்கு அருகில் தாக்கப்பட்டது. இக் குழு மட்டக்களப்பில் நடைபெறவிருந்த சிறிசேனவின் கூட்டத்திற்காக மேடையைத் தயார்படுத்திக்கொண்டிருந்த வேளையே பிற்பகல் 3.45 மணியளவில் தாக்கப்பட்டது. த.ம.வி.பு. ஆதரவாளர்களைக் கொண்ட குழுவொன்று அங்கு வந்து, ஐ.தே.க.வின் மட்டக்களப்பு அமைப்பாளர் கே.மோகனையும், அவரது ஆதரவாளர்களையும் அச்சுறுத்தியது. ஐ.தே.க. ஆதரவாளர் ஒருவர் கடத்தப்பட்டதார். வேறு இருவர் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டதுடன், அவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். (CaFFE)

**13.** 27 டிசம்பர் 2014: **எதிரணி ஆதரவாளர்கள் தாக்கப்பட்டனர்**

கூட்டமொன்றில் கலந்துவிட்டு முச்சக்கர வண்டியொன்றில் பிரயாணம் செய்த சிறிசேன ஆதரவாளர்களைக் கொண்ட குழுவொன்று உடஹாகொட, நாமனெலியவில் தாக்கப்பட்டது. இரு நபர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டார்கள். மேலதிகமாக, டிசம்பர் 27 அன்று, மல்வத்தையில் சிறிசேனவின் பிரச்சாரச் செயற்பாடுகளில் இணைந்துகொண்ட இரு தீவிரமான ஐ.தே.க. ஆதரவாளர்களான மகிந்தவும், வன்னிஆரச்சியும் மற்றும் அவர்களது மூன்று நண்பர்களும் மோட்டார் சைக்கிள்களில் பிரயாணம் செய்த ஆயுததாரிகளைக் கொண்ட குழுவொன்றினால் அச்சுறுத்தப்பட்டனர். ஐ.தே.க. ஆதரவாளர்களை நோக்கி ஆயுதங்களை ஆயுததாரிகள் காட்டியதுடன், சிறிசேனவின் பிரச்சாரத்திற்கு உதவியளிப்பதிலிருந்து விலகியிருக்குமாறு அவர்களை மிரட்டினர். (CaFFE)

**14.** 21 டிசம்பர் 2014: **எதிரணி ஆதரவாளர்கள் தாக்கப்பட்டனர்**

டிசம்பர் 24 அன்று வெல்லம்பிட்டியில் பொது எதிரணி வேட்பாளரின் கூட்டத்தை அறிவிக்கும் பொருட்டு டிசம்பர் 21 அன்று வெல்லம்பிட்டியில் சுவரொட்டிகளை ஒட்டிய பொது எதிரணி ஆதரவாளர்களின் குழுவொன்று வெள்ளை 'வேன்' ஒன்றில் வந்திறங்கிய குழுவொன்றினால் தாக்கப்பட்டது. தாக்குதல் நடத்தியவர்கள் ஆயுதம் தரித்திருந்ததுடன், கூரிய பொருளொன்றினால் குத்தப்பட்ட இருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். (CaFFE)

**15.** 19 டிசம்பர் 2014: **சிவிலியன்கள் தாக்கப்பட்டதுடன், ஒருவர் நிர்வாணமாக்கப்பட்டார்**

டிசம்பர் 19 அன்று, வண.அம்பிட்டிய சுமணரத்ன தேரரின் தலைமையிலான பௌத்த பிக்குகள் உட்பட சிவிலியன்களைக் கொண்ட குழுவொன்று மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தின் முன்னிலையில் பொலிசாரினால் தாக்கப்பட்டது. அவர்கள் தாக்கப்பட்ட போது தமது வாக்களிக்கும் உரிமை உறுதிப்படுத்தப்பட வேண்டும் என சிவிலியன்களைக் கொண்ட குழு எதிர்ப்பு தெரிவித்தது. "பகுதியின் பிரதி பொலிஸ் மா அதிபர் நந்தன முனசிங்க மற்றும் மட்டக்களப்பு பொலிசின் பொறுப்பதிகாரியான பிரதம இன்ஸ்பெக்டர் ஹெட்டிஆரச்சி ஆகியோர் உட்பட சிரேஷ்ட பொலிஸ் ஆளணியினரின் முன்னிலையில் தாக்கப்பட்டு, நிர்வாணமாக்கப்பட்டு, காவியுடை கழற்றப்பட்டதையிட்டு நாம் வெட்கப்படுகின்றோம்" எனக் கூறி, சம்பவத்தை சுமணரத்ன தேரர் உறுதிப்படுத்தினார்.

http://www.island.lk/index.php?page_cat=article-details&page=article-details&code_title=116365



பொலிசாரினால் ஒரு எதிர்ப்பாளர் நிர்வாணமாக்கப்பட்டார் (Photo: CaFFE)

**16.** 09 டிசம்பர் 2014: **எதிரணி ஆதரவாளர்கள் தாக்கப்பட்டனர்**

டிசம்பர் 9 அன்று கண்டியில் கூட்டமொன்றில் கலந்து கொண்ட பின்னர் திரும்பிக்கொண்டிருந்த மைத்திரிபால சிறிசேனவின் ஆதரவாளர்களைக் கொண்ட குழுவொன்று கட்டுகஸ்தோட்டை, மஹா பாலமவுக்கு அருகில் தாக்கப்பட்டது. தாக்குதல் நடத்தியோர் 'கெப்' வாகனமொன்றில் வந்திறங்கியதுடன், அம்பேதன்னவைச் சேர்ந்த நான்கு பேர் கட்டுகஸ்தோட்டை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். 'பஸ்' ஒன்றில் வீட்டுக்கு திரும்பிக்கொண்டிருந்த ஆதரவாளர்களின் இன்னொரு குழுவும் தாக்கப்பட்டது. (CaFFE)

**17.** 06 ஜனவரி: **ஐ.தே.க. ஆதரவாளர்களின் குடும்ப உறுப்பினர் தாக்கப்பட்டார்**

ஜனவரி 6 அன்று மாலை 6.00 மணியளவில், ஐ.தே.க. ஆதரவாளரான திரு.ஜனக அபேரத்னவைத் தேடி வந்த கும்பலொன்று, அவரது குடும்பத்தினரைத் தாக்கியது. (CMEV)

**18.** 05 ஜனவரி: **ஐ.தே.க. உறுப்பினர் தாக்கப்பட்டார்**

ஜனவரி 5 அன்று ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் ஒருவரான திரு.வஜிர மனோஜ் என்பவர் தாக்கப்பட்டதுடன், அவர் பின்னர் சிலாபம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். வைத்தியசாலைப் பொலிசாருக்கான தனது வாக்குமூலத்தில், ஆரச்சிக்கட்டுவ சந்தைக்கு அருகில் ஐ.பொ.சு.மு. ஆரச்சிக்கட்டுவ பிரதேச சபைத் தலைவரின் சாரதியினால் தாக்கப்பட்டதாக திரு.மனோஜ் குறிப்பிட்டிருந்தார். (CMEV)

**19.** 24 நொவம்பர் 2014: **எதிரணி வாகனத் தொடரணி தாக்கப்பட்டது**

ஐ.தே.க. வட மேல் மாகாண சபை உறுப்பினர் எச்.வி.அலவத்துவெலவின் வாகனத் தொடரணியொன்று குருநாகலை அடுத்துள்ள மாவத்தகமவில் தாக்கப்பட்டது. தாக்குதலில் ஐ.தே.க. பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் காயமடைந்ததுடன், அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

(CaFFE / http://www.thesundayleader.lk/2014/11/30/election-violence-and-violations/)

**20.** 22 நொவம்பர் 2014: **எதிரணி ஆதரவாளர்கள் சுடப்பட்டனர்**

எதிரணிக்கு திரு.மைத்திரிபால சிறிசேன கட்சி மாறிய உடனேயே பொது வேட்பாளருக்கு ஆதரவாக மக்கொனவில் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்த வைபவமொன்றில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றது. துப்பாக்கிச் சூட்டில் முன்னாள் ஐ.தே.க. உள்ளூராட்சி சபை உறுப்பினர் ஒருவரான ஷமில ரணசிங்க காயமடைந்தார். அவரது தலையில் சுடப்பட்டதுடன், அவர் நாகொட வைத்தியசாலைக்கு விரைந்து கொண்டு செல்லப்பட்ட்டார். அவர் பின்னர் கொழும்பு தேசிய வைத்தியசாலை நரம்பியல்சத்திரசிகிச்சை அலகுக்கு இடமாற்றப்பட்டார்.

(http://www.thesundayleader.lk/2014/11/30/election-violence-and-violations/)

## ஆ. மரண அச்சுறுத்தல்கள் மற்றும் வேறு அச்சுறுத்தல்கள்

**21.** 14 ஜனவரி: **முன்னாள் ஜனாதிபதியின் மகனுக்கு மரண அச்சுறுத்தல்கள்**

தொலைபேசி மூலம் தனக்கு மரண அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளதாக வலியுறுத்தி 14 அன்று தங்காலை பொலிஸில் ஐ.பொ.சு.மு. ஹம்பாந்தோட்டை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ (முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகன்) முறைப்பாடு செய்துள்ளார். நான்கு சந்தர்ப்பங்களில் இரவு 11 மணிக்கும், நள்ளிரவு 12 மணிக்கும் இடையில் ஓர் இலக்கத்திலிருந்து அழைப்புக்களை அவர் பெற்றுள்ளார்.

(http://www.dailymirror.lk/61207/namal-receives-death-threats#sthash.zEn3OX9D.dpuf)

**22.** 13 ஜனவரி: **அரசியல்வாதியின் மனைவி மரண அச்சுறுத்தலொன்றைப் பெற்றார்**

பிவிதுரு ஹெல உறுமயவின் அரசியல் செயற்பாட்டைக் கைவிட்டு, ஒரு வாரத்தினுள் நாட்டைவிட்டு வெளியேறாவிட்டால், அவரது இரு பிள்ளைகளும், அவரும் கொல்லப்படுவார்கள் எனத் தெரிவித்து, அச்சுறுத்தும் தொலைபேசி அழைப்பொன்றை தனது மனைவி பெற்றுக்கொண்டுள்ளதாக பிவிதுரு ஹெல உறுமயவின் பொதுச் செயலாளர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

(http://newsfirst.lk/english/2015/01/gammanpila-reveals-contents-telephone-call/71930)

**23.** 11 ஜனவரி: **ஐ.பொ.சு.மு. ஆதரவாளர் அச்சுறுத்தப்பட்டார்**

கலேன்பிந்துனுவௌவில் ஐ.தே.க. கட்சி அலுவலகத்தின் முன்னால் ஐ.பொ.சு.மு. ஆதரவாளரான பீ.கே.தனுக மதுஷனை ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர் ஒருவரான அனுர பண்டார அச்சுறுத்தியதுடன், அடிக்கவும் முற்பட்டுள்ளார். (CMEV)

**24.** 10 ஜனவரி: **தே.ஐ.மு. ஆதரவாளர் அச்சுறுத்தப்பட்டார்**

கண்டி சொகஞ்சி ஆரம்பப் பாடசாலைக்கு 'டபிள் கெப்' வாகனம் ஒன்றில் வந்திறங்கிய நான்கு அடையாளம் காணப்படாதோரினால் பேராசிரியர் சுஜித் நிஸங்கவின் உயிருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. அண்மையில் சிரச தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வெற்றியை பேராசிரியர் நிஸங்க எதிர்வுகூறியிருந்தார். பொலிஸ் முறைப்பாடொன்று 119 CIB 314/11இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. (CMEV)

**25.** 10 நொவம்பர் 2014: **தே.ஐ.மு. ஆதரவாளர் அச்சுறுத்தப்பட்டார்**

நிக்கவரட்டியவில் ஜனவரி 9 அன்று இரவு 8.30 மணியளவில் எச்.எம்.பிரியந்தி ஹிருகுமாரியின் (தேசிய ஜனநாயக முன்னணியின் ஆதரவாளர்) வதிவிடத்தில் வந்திறங்கிய அடையாளங் காணமுடியாத துப்பாக்கிதாரிகள் அரசியலில் ஈடுபடக்கூடாது என அவரை அச்சுறுத்தியுள்ளனர். துப்பாக்கிதாரிகள் வந்திருந்த வேளை தனது கணவருடன் அவர் இருந்துள்ளதுடன், 119க்கு அவர் அழைப்புவிடுத்தார். (CMEV)



கொழும்பில் போராட்டமொன்றில் பிரிட்டோ பெர்னாண்டோ உரையாற்றுகின்றார் (Vikalpa Photo)

**26.** 04 ஜனவரி: **மனித உரிமைகள் காவலர்கள் பயமுறுத்தப்பட்டனர்**

ஜனவரி 4 அன்று உல்லாசப்பயணமொன்றிலிருந்து வீட்டுக்குத் தனது குடும்பத்துடன் திரும்பிவந்த மனித உரிமைகள் காவலர் திரு.பிரிட்டோ பெர்னாண்டோ தனது படலை மீது நாயொன்றின் வெட்டப்பட்ட

தலையொன்று 'பிளாஸ்டிக்' பையில் தொங்கிக்கொண்டிருப்பதை கண்டுபிடித்தார். Fellow Right to Life சக பணியாட் உறுப்பினரான திரு.பிரசங்க பெர்னாண்டோவும் தனது வீட்டிலும் அதே விதமான சம்பவத்திற்கு உட்பட்டதாக அறிக்கையிட்டிருந்தார். 2014 ஒக்ரோபர் 27 அன்று Fellow Right to Life தாபனத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்டு, நடத்தப்பட்ட காணாமல் போனோரை நினைவுகூருவது தொடர்பில் பயமுறுத்தல் விடுக்கப்பட்டிருக்கலாம் என்பதே சாத்தியமான காரணங்களாக இருக்கலாம் என பாதிக்கப்பட்டவர்கள் நம்புகின்றனர். இவ் வைபவத்தை தொடர்ந்து, Fellow Right to Life பணியாட் உறுப்பினர்களினதும், ஏனைய மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களினதும் முகங்களுடனான சுவரொட்டிகள் நீர்கொழும்பு நகரத்தைச் சுற்றி எல்லா இடங்களிலும் காணப்பட்டன. "மக்கர ராக்ஷயோ அத்துருதஹன் வொவுன் விக்குனகென கை" என சுவரொட்டிகள் தலைப்பிடப்பட்டிருந்தன (CMEV). "வீதியே விரோதய" (வீதிகளில் எதிர்ப்பு) என அழைக்கப்பட்ட வீதி பிரச்சாரமொன்றில் இவ்விரு செயற்பாட்டாளர்களும் சம்பந்தப்பட்டிருந்ததுடன், இது அப்போதைய ஜனாதிபதி ராஜபக்ஷவை மிகவும் கண்டிப்பதாகவும், பொது எதிரணி வேட்பாளருக்கு ஆதரவளிப்பதாகவும் தேர்தல்களுக்கு கிட்டியதாக இடம்பெற்றிருப்பதால் இப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டிருக்கலாம் எனத் தெரிகின்றது.

## இ. வதிவிட இடங்களினதும், கட்சி அலுவலகங்களினதும், வியாபாரத் தாபனங்களினதும், வாகனங்களினதும் மீதான தாக்குதல்கள்

**27.** 12 ஜனவரி: **ஐ.பொ.சு.மு. ஆதரவாளரின் வதிவிடம் மீது கல்லெறியப்பட்டது**

உடுவெல நவநகரய 15/19Cஇல் வாழ்கின்ற ஐக்கிய பொதுசன சுதந்திர முன்னணியின் ஆதரவாளர் ஒருவரான டி.ஆர்.அஸந்திகா முனவீரவின் வதிவிடம் மீது பிற்பகல் 2 மணியளவில் கற்கள் வீசப்பட்டன. பாதிக்கப்பட்டவரின் கூற்றுப்படி, அவ் வேளையில் வீட்டில் அவரும், அவரது இரு பிள்ளைகளும் இருந்ததுடன், அருகில் இருந்த அவரது தாயின் வீட்டின் மீதும் கற்கள் வீசப்பட்டன. (CMEV)

**28.** 11 ஜனவரி: **ஐ.பொ.சு.மு. ஆதரவாளரின் வீடு மீது தார் தாக்குதல்**

கலன்பிதுனுவெவ, ஹருலுனிகாவெள இல.534இல் அமைந்துள்ள ஐக்கிய பொதுசன சுதந்திர முன்னணி (ஐ.பொ.சு.மு.) ஆதரவாளரான பீ.ஜி.பிரேமசந்திரவின் வீடு இரவு 10.30 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இரு அடையாளங் காண முடியாதவர்களினால் தாக்கப்பட்டது. பொலிசில் முறைப்பாடொன்றைத் தான் பதிவுசெய்யவில்லை என CMEVக்கு திரு.பிரேமரத்ன அறிவித்தார். (CMEV)

**29.** 11 ஜனவரி: **ஐ.பொ.சு.மு. ஆதரவாளரின் வீடு மீது தார் தாக்குதல்**

ஐக்கிய பொதுசன சுதந்திர முன்னணி (ஐ.பொ.சு.மு.) ஆதரவாளர் நொயல் இந்திக பிரேமவன்ஸவின் வீடு மீது அதிகாலை 1.30 மணியளவில் அடையாளங் காணமுடியா குழுவொன்றினால் தாரைப் பயன்படுத்தி தாக்குதல் நடத்தப்பட்டது. கலன்பிதுனுவெவ பொலிஸ் நிலையத்தின் கூற்றுப்படி முறைப்பாடொன்றும் செய்யப்படவில்லை. (CMEV)




எதிரணி ஆதரவாளர் ஒருவரின் முச்சக்கரவண்டி தாக்கப்பட்டது.

**30.** 11 ஜனவரி: **ஐ.பொ.சு.மு. ஆதரவாளரின் வீடு மீது தார் தாக்குதல்**

கலன்பிதுனுவெவவைச் சேர்ந்த ஹீருலுன்கேவௌ இல.530இல் அமைந்துள்ள ஐக்கிய பொதுசன சுதந்திர முன்னணி (ஐ.பொ.சு.மு.) ஆதரவாளரான பீ.கே.டி.மதுஷானின் வீடு தாரைப் பயன்படுத்தி அடையாளம் காணமுடியாத குழுவொன்றினால் தாக்கப்பட்டது. கலன்பிதுனுவெவ பொலிஸ் நிலையத்தினால் செய்யப்பட்ட விசாரணையின் பிரகாரம், இச் சம்பவம் தொடர்பில் அவர்கள் ஏதேனும் முறைப்பாட்டினைப் பெற்றுக்கொள்ளவில்லை. (CMEV)

**31.** 14 ஜனவரி: **ஐ.பொ.சு.மு. ஆதரவாளரின் வீடு மீது தார் தாக்குதல்**

ஐ.பொ.சு.மு. ஆதரவாளர் ஒருவரான கே.ஜி.மல்லிகாவின் வீடு மீது தார் தாக்குதலொன்று அறியப்படாத ஆட்களினால் மேற்கொள்ளப்பட்டது. இத்தாக்குதலில் முன்புறத்துடனும், நடைபாதையுடனும் சேர்த்து தோட்டத்தில் நிறுத்தப்பட்டிருந்த 64-6463 இலக்கத் தகட்டிலான வெள்ளை 'வேன்' ஒன்றும் சேதமாகின. பொலிஸ் முறைப்பாடொன்று பதிவுசெய்யப்படவில்லை. (CMEV)

**32.** 13 ஜனவரி: **தே.ஜ.மு. ஆதரவாளரின் வதிவிடம் தாக்கப்பட்டது**
தேசிய ஜனநாயக முன்னணியின் (தே.ஜ.மு.) ஆதரவாளர்களான டி.எம்.லீலாவதி மற்றும் கே.எம்.கருணாரத்ன ஆகியோரின் வீடுகளை உடைத்த மக்களின் குழுவொன்று அவர்களது இரு மகன்கள் உட்பட குடியிருப்பாளர்களைத் தாக்கி, காயப்படுத்தியது. இரும்புக் கம்பிகளைக் காவியபடி மோட்டார் சைக்கிள்களில் வந்திறங்கிய தாக்குதல் நடத்தியோர், வீட்டில் இருந்த நான்கு பேரையும் தாக்கினார்கள். அங்கு தொடர்ந்த சண்டையில் இரு தரப்புக்களும் காயங்களை அடைந்ததுடன், பாதிக்கப்பட்டவர்களின் மகன்களில் ஒருவரான சுனில் பிரேமரத்ன (32 வயது) தலையில் பாரதூரமான காயங்களின் பின் பேச்சு மூச்சற்றவராக விளங்கினார். சிகிச்சைக்காகப் பாதிக்கப்பட்டவர்கள் பொலன்னறுவை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட அதேவேளை, தாக்குதல் நடத்தியோர் வெலிக்கந்தை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். (CMEV)

**33.** 11 ஜனவரி: **ஐ.பொ.சு.மு. ஆதரவாளரின் வீடு எரிக்கப்பட்டது**
ஐ.பொ.சு.மு. ஆதரவாளரான உடுலியகமகே பந்துலவின் வதிவிடமானது ஐ.தே.க. பிரதேச சபை உறுப்பினர் லலித் ஆனந்தவின் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி (ஐ.தே.க.) ஆதரவாளர்களினால் இரவு 10.30 மணியளவில் எரிக்கப்பட்டது. மாதம்பை பொலிஸ் நிலையத்தில் MCR 66/62இன் கீழ் பொலிஸ் முறைப்பாடொன்று பதிவுசெய்யப்பட்டுள்ளது. (CMEV)

**34.** 11 ஜனவரி: **ஐ.பொ.சு.மு. ஆதரவாளரின் வீடு எரிக்கப்பட்டது**
இறக்குவானையில் ஐக்கிய பொதுசன சுதந்திர முன்னணி (ஐ.பொ.சு.மு.) ஆதரவாளர் லயனல் பெர்னாண்டோவுக்குச் சொந்தமான வீடு எரிக்கப்பட்டது. இதற்கு பொறுப்பானவர்கள் தேசிய ஜனநாயக முன்னணியின் (தே.ஜ.மு.) ஆதரவாளர்களே என அவர் சந்தேகிக்கின்றார். இறக்குவனை பொலிஸ் நிலையத்தில் MOIB 138/62இன் கீழ் முறைப்பாடொன்றை அவர் பதிவுசெய்துள்ளார். (CMEV)

**35.** 11 ஜனவரி: **ஐ.பொ.சு.மு. ஆதரவாளரின் வீடு மீது கல்லெறி**
அறியப்படாத குழுவொன்றினால் பொலன்னறுவையில் விதிவிடமொன்றின் மீது கற்கள் எறியப்பட்டன. ஐக்கிய பொதுசன சுதந்திர முன்னணியின் (ஐ.பொ.சு.மு.) ஆதரவாளர் ஒருவரான அனுராதா சந்தமல்லி என்ற குடியிருப்பாளரின் கூற்றுப்படி, அவரது வீடு மீது அடிக்கடி கற்கள் எறியப்பட்டதுடன், இதனால் வீட்டுக்கு சேதங்கள் ஏற்பட்டன. பொலிஸ் முறைப்பாடொன்று பதிவுசெய்யப்படவில்லை. (CMEV)

**36.** 11 ஜனவரி: **ஐ.பொ.சு.மு. ஆதரவாளரின் வீடு மீது தார் தாக்குதல்**
ஐக்கிய பொதுசன சுதந்திர முன்னணியின் (ஐ.பொ.சு.மு.) ஆதரவாளர் ஒருவரான என்.எம்.நவரத்ன பண்டாரவின் வதிவிடம் (இல.530, ஹூருளு நிக்கவெவ, கலன்பிதுனுவெவ) அறியப்படாத மக்களினாலான தார் தாக்குதலொன்றினால் சேதமடைந்துள்ளது. (CMEV)

**37.** 11 ஜனவரி: **ஐ.பொ.சு.மு. அலுவலகம் மீது கல்லெறி**
பொலன்னறுவையில் ஐக்கிய பொதுசன சுதந்திர முன்னணி (ஐ.பொ.சு.மு.) அலுவலகமொன்று அடையாளங் காணப்படாத மக்கள் குழுவொன்றினால் தாக்கப்பட்டது. ஐ.பொ.சு.மு. பதாதைகள் அழிக்கப்பட்டதை சேதங்கள் உள்ளடக்குகின்றன. (CMEV)

**38.** 09 ஜனவரி: **ஐ.பொ.சு.மு. அரசியல்வாதியின் வீடு உடைக்கப்பட்டது**
யட்டிநுவரவில், ஐ.பொ.சு.மு. தலைவர் ஒருவரான கே.வி.எஸ்.அபேவிக்ரமவின் வதிவிடத்தினை பொபி திசநாயக்க உட்பட ஆறு பேர் உடைத்து, உட்புகுந்தனர். தாக்குதல் நடத்தியோர் பல்கனியிலிருந்து

வீட்டினுள் பிரவேசித்ததுடன், மூத்த மகன் நிபுனவையும் காயப்படுத்தினர். இரு தரப்புக்களுக்கு இடையில் இழுபறியொன்று இடம்பெற்றதுடன், இதில் இரு தரப்பினருமே காயங்களை அடைந்தனர். (CMEV)

**39.** 09 ஜனவரி: **ஐ.பொ.சு.மு. ஆதரவாளர்களின் வீடு உடைக்கப்பட்டது**

ஐக்கிய பொதுசன சுதந்திர முன்னணி (ஐ.பொ.சு.மு.) ஆதரவாளரான எ.ஜி.டிலானி காயா சஞ்ஜீவனியின் வதிவிடம் குழுவொன்றினால் உடைக்கப்பட்டதுடன், குழுவைச் சார்ந்தவர்கள் குடியிருப்பாளர்களையும் பயமுறுத்தியுள்ளனர் என CMEVக்கு அறிக்கையிடப்பட்டிருந்தது. அரலகன்வில பொலிஸ் நிலையத்தில் EIB 251/53இன் கீழ் பொலிஸ் முறைப்பாடொன்று பதிவுசெய்யப்பட்டதுடன், அதில் தேசிய ஜனநாயக முன்னணியின் (தே.ஜ.மு.) ஆதரவாளர் ஒருவரான தர்மரத்ன என அறியப்பட்ட நபர் ஒருவர் சந்தேக நபர் ஒருவராகப் பெயரிடப்பட்டிருந்தார். (CMEV)

**40.** 09 ஜனவரி: **ஐ.பொ.சு.மு. ஆதரவாளரின் வீடு உடைக்கப்பட்டது**

இதே போன்ற சம்பவமொன்று, ஐக்கிய பொதுசன சுதந்திர முன்னணி (ஐ.பொ.சு.மு.) ஆதரவாளர் ஒருவரான துக்கன்னராலகே மெனிக்கேயின் வதிவிடத்தில் இடம்பெற்றது. இதில் அடையாளம் காணப்படாத குழுவொன்று இரவு 9.45 மணியளவில் அவர்களது வீட்டுக்குள் அத்துமீறிச் சென்று, கதவுகள் மற்றும் யன்னல்கள் உட்பட ஆதனத்திற்கு சேதங்களை விளைவித்தது. அரலன்கலவில பொலிஸ் நிலையத்தில் EIB 258/55இன் கீழ் பொலிஸ் முறைப்பாடொன்று பதிவுசெய்யப்பட்டுள்ளது. (CMEV)

**41.** 08 ஜனவரி: **ஐ.பொ.சு.மு. பிரதேச சபை தலைவரின் வீடு மீது கல்லெறியப்பட்டது**

திருகோணமலை பிரதேச சபைத் தலைவர் கபில நுவான் அத்துகோரளையின் வதிவிடம் மீது அறியப்படாத நபர்களினால் கல்லெறியப்பட்டது. (CMEV)

**42.** 06 ஜனவரி: **ஐ.தே.க. ஆதரவாளரின் வியாபார ஸ்தலம் தாக்கப்பட்டது**

பதுளை, ஹாலி எலவில் ஜனவரி 6 அன்று ஐ.தே.க. ஆதரவாளர் ஒருவரான திரு.முத்துபண்டாரவின் வியாபார ஸ்தலம் தாக்கப்பட்டது. பாதிக்கப்பட்டவரின் கூற்றுப்படி, இரு தடவைகள் "அனுராதா ஹொட்டேலை" குற்றமிழைத்தோர் தாக்கியுள்ளனர். முதலாவது தாக்குதலைத் தொடர்ந்து, வெள்ளை நிற 'டிபென்டர்' வாகனமொன்றில் வியாபார ஸ்தலத்தை விட்டு தாக்குதல் நடத்தியோர் செல்வதை அவர் கண்டுள்ளார். முதலாவது தாக்குதல் நடந்து அண்ணளவாக 30 நிமிடங்களின் பின் இரண்டாவது தாக்குதல் இடம்பெற்றது. வாகனத்தின் இலக்கத்தை WP KB - 6570 என பாதிக்கப்பட்டவர் அடையாளம் கண்டுள்ளார். தாக்குதல் நடத்தியோர் பாதிக்கப்பட்டவரை இரும்புக் கம்பியால் தாக்கியதுடன், துப்பாக்கிச் சூடுகளையும் நடத்தியுள்ளனர். (CMEV)

**43.** 06 ஜனவரி: **ஐ.தே.க. ஆதரவாளரின் வீடு தாக்கப்பட்டது**

எட்டம்பிட்டியவில் அமைந்துள்ள ஐ.தே.க. ஆதரவாளர் ஒருவரான திரு.வி.வீரசிங்கவின் வீடு ஜனவரி 6 அன்று அதிகாலை வேளையில் தாக்கப்பட்டது. இதில் வீட்டின் யன்னல்கள், சுவர்கள் மற்றும் கூரை ஆகியன சேதமடைந்தன. பாதிக்கப்பட்டவரின் கூற்றின்படி, வெளிநாட்டுத் தொழில் பணியகத்தில் அப்போதைய அமைச்சர் டிலான் பெரேராவின் கீழ் பணியாற்றிய ஊழியர்களே சந்தேக நபர்கள் என சார்த்துரைக்கப்பட்டுள்ளது. (CMEV)

**44.** 06 ஜனவரி: **ஐ.தே.க. ஆதரவாளரின் வீடு தாக்கப்பட்டது**

பெலியத்தை ஐ.தே.க. தொடர்பாடல் பிரிவின் செயலாளர் திரு.எஸ்.எச்.கமால்சிறியின் வீடு ஜனவரி 6 அன்று இரவு 11.45 மணியளவில் தாக்கப்பட்டது. முறைப்பாட்டின் பிரகாரம், துப்பாக்கிச் சூடுகள்

நடத்தப்பட்டதுடன், அவை சுவர்களையும், வளவில் தரித்து நின்ற முச்சக்கர வண்டியொன்றையும் தாக்கின. (CMEV)

**45.** 06 ஜனவரி: **ஐ.தே.க. ஆதரவாளர்களின் வீடுகளைத் துப்பாக்கிச் சூடுகள் சேதமாக்கின**

ஜனவரி 6 அன்று அதிகாலை வேளையில் ஐ.தே.க. உறுப்பினர் திரு.சமந்த பத்மசிறி மற்றும் ஆதரவாளர் மொஹமட் இஸ்மயில் மொஹமட் இஸ்தம் ஆகியோரின் வீடுகள் மீது கற்கள் எறியப்பட்டு, துப்பாக்கிச் சூடுகள் நடத்தப்பட்டன. இதன் விளைவாக சுவர்களுக்கும், யன்னல்களுக்கும் சேதங்கள் ஏற்பட்டன. பாதிக்கப்பட்ட பன்னல பொலிஸ் நிலையத்தில் திரு.பத்மசிறிக்கு பதிவு இலக்கம் EIB 105/41 மற்றும் திரு.மொஹமட் திஸ்தமுக்கு பதிவு இலக்கம் EIB 105/42 ஆகியவற்றின் கீழ் இருவரின் முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டன. (CMEV)

**46.** 03 ஜனவரி: **தே.ஜ.மு. கட்சி அலுவலகத்தின் மீது துப்பாக்கிச் சூடு**

பொலன்னறுவையில் உள்ள தேசிய ஜனநாயக முன்னணி (தே.ஜ.மு.) கட்சி அலுவலகமொன்று மாலை 6.30 மணியளவில் தாக்கப்பட்டது. நேரில் கண்ட சாட்சிகளின் படி, T56 துப்பாக்கிகளுடன் சுமார் 50 ஆயுத பாணியிலான தனிப்பட்டவர்கள் சுமார் 10 'டிப்பென்டர்' வாகனங்களில் வந்திறங்கி, அலுவலகத்தைத் தாக்கினர். பதாதைகளின் அழிவு மற்றும் அயல்புறத்தில் தரித்திருந்த மோட்டார் சைக்கிளுக்கும், லொறிக்கும் சேதம் ஆகியவற்றைச் சேதங்கள் உள்ளடக்குகின்றன. அரலன்கவில பொலிஸ் நிலையத்தில் மூன்று முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டன. (CMEV)

**47.** 02 ஜனவரி: **கட்சி மாறிய ஐ.பொ.சு.மு. அரசியல்வாதியின் வதிவிடம் மீது துப்பாக்கிச் சூடு**

ஐ.பொ.சு.மு. வட மேல் மாகாண சபை உறுப்பினர் லக்ஷ்மன் வெந்தருவவின் வதிவிடம் மீது இரவு 11.45 மணியளவில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இது அவர் கட்சியிலிருந்து மாறி, பொது எதிரணி வேட்பாளர் சிறிசேனவுக்கு ஆதரவளிப்பதாக வாக்குறுதி அளித்த பின்னர் நடந்ததாகும். ஜீப்பொன்றில் (இலக்கத் தகடு தெரியவில்லை) வந்திறங்கிய இருவர் திரு.வெந்தருவவின் சாரதியான சமரகோன்கே அபேகோனைச் சுட்டுள்ளனர். அவ்வேளையில் கூட்டமொன்றுக்காக திரு.வெந்ததருவ வெளியே சென்றிருந்தார். படலைக்கு வெளியே வாகனமொன்றின் சத்தத்தைக் கேட்ட சாரதி, படலையைத் திறக்கச் சென்ற போது, அவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. அவர் குருநாகல் பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, தனது காயங்களுக்காக சிறிய சத்திரசிகிச்சைக்கு உட்பட்டார்.

(CMEV / http://www.adaderana.lk/news/29287/shots-fired-at-lakshman-wendaruwas-home-1-injured)

**48.** 01 ஜனவரி: **ஐ.தே.க. கட்சி அலுவலகம் தாக்கப்பட்டது**

ஐக்கிய தேசியக் கட்சியின் (ஐ.தே.க.) பெலியத்தை தேர்தல் தொகுதி அமைப்பாளர் டபிள்யு.பீ.விமால் ஜயசிறியின் வீட்டின் மீதான தாக்குதலொன்று மாலை 6.45 மணியளவில் நடத்தப்பட்டதாக அறிக்கையிடப்பட்டது. திரு.ஜயசிறியின் கூற்றுப்படி, மேற்படி அமைவிடத்தில் மூன்று (03) ஐ.தே.க. ஆதரவாளர்களுடன் கூட்டமொன்றில் தான் இருந்த போது, மோட்டார் சைக்களில் வந்திறங்கிய ஆறு பேரைக் கொண்ட குழுவொன்று அயல்புறத்திலிருந்த பிரச்சார அலங்காரங்களை அகற்றியது, வீட்டுக்குள் புகுந்து மரத்தளபாடங்களைச் சேதமாக்கியது, முக்கியமான ஆவணங்களை அழித்தது அத்துடன் அவரது மனைவியான எ.எம்.பி.பிரியங்காவைத் தாக்கியது. இதன் விளைவாக அவரது நெற்றி காயமடைந்தது. அவர்களது வதிவிடத்தில் தரித்திருந்த நான்கு மோட்டார் சைக்கிள்களும் சேதமாக்கப்பட்டன. (CMEV)

**49.** 29 டிசம்பர் 2014: **ஐ.தே.க. கட்சி அலுவலகம் தாக்கப்பட்டது**

பதுளை மாவட்டம், மஹியங்கனை, மிதஹங்கல சந்தியில் அமைந்திருப்பதும், மாகாண சபை உறுப்பினர் எம்.சூரசேனவினால் பராமரிக்கப்படுவதுமான ஐக்கிய தேசியக் கட்சி (ஐ.தே.க.) அலுவலகம் 28 அன்று

இரவு 10.00 மணியளவில் தாக்கப்பட்டது. தாக்குதலுக்காக ஒரு சிவப்பு 'டிபென்டர்', வெள்ளை 'ட்ரூப்பர் ஜீப்' மற்றும் 'நவரா கெப்' ஆகியவற்றில் அடையாளங் காணமுடியாத குழுவொன்று (சுமார் 15 பேர்) வந்திறங்கியது. ஆகாயத்தை நோக்கி நான்கு ஆயுதபாணிகளான நபர்கள் சுட்டதுடன், அவ்வேளையில் அலுவலகத்தில் இருந்த ஆறு பேரையும் தாக்கியது. ஓர் அங்கவீனமான போர் வீரரும், முறையே 13 வயதும், 15 வயதும் கொண்ட இரு பையன்களும் அங்கிருந்தனர். திரு.சூரசேனவின் கூற்றுப்படி, ஐந்து தனிப்பட்டவர்கள் காயமடைந்ததுடன், ஒருவர் கடுமையான நிலைமையொன்றில் இருந்தார். (CMEV)

**50.** 28 டிசம்பர் 2014: **ஐ.தே.க. கட்சி அலுவலகம் தாக்கப்பட்டது**

கம்பஹா மாவட்டம், மினுவாங்கொடையில் ஐக்கிய தேசியக் கட்சியின் அலுவலகமொன்று குழுவொன்றினால் தாக்கப்பட்டது. மூன்று 10×4 பதாகைகள் மற்றும் ஆறு 12 அடி இரும்புக் கோல்கள் திருடப்பட்டன. வர்ணகுலசூரிய ஹென்றி ஜோசப் பெர்னாண்டோவினால் ஐ.தே.க. கட்சி அலுவலகம் பராமரிக்கப்பட்டது. (CMEV)

**51.** 26 டிசம்பர் 2014: **ஐ.தே.க. கட்சி அலுவலகம் தாக்கப்பட்டது**

கண்டி மாவட்டம் மெனிக்கின்னவில் எச்.எ.சிசில் ஜயவர்தனாவினால் பராமரிக்கப்படும் ஐக்கிய தேசியக் கட்சியின் (ஐ.தே.க.) கட்சி அலுவலகமொன்று டிசம்பர் 26 இரவன்று அறியப்படாத மக்களைக் கொண்ட குழுவொன்றினால் தாக்கப்பட்டது. மேலும், அயல்புறத்திலிருந்த பொது ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் பெருமளவு பதாதைகள் அழிக்கப்பட்டன. (CMEV)

**52.** 26 டிசம்பர் 2014: **தே.ஐ.மு. தேர்தல் அலுவலகம் மீது குண்டுத் தாக்குதல்**

ஏறாவூர், சந்திவெளியில் பொது எதிரணி வேட்பாளரின் தேர்தல் அலுவலகம் மீது இரவு 11 மணியளவில் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. முன்னாள் முதலமைச்சர் பிள்ளையானின் கட்சியான த.ம.வி.பு.இன் உறுப்பினர்களைக் கொண்ட குழுவொன்றே தாக்குதலை மேற்கொண்டதாக பொலிசிடம் கூறப்பட்டது. (CaFFE)

**53.** 24 டிசம்பர் 2014: **ஐ.தே.க. தலைமை அலுவலகம் தாக்கப்பட்டது**

ஐ.தே.க. ஆதரவாளர்களுக்கும், அங்கு போராட்டம் நடத்திய தேசிய தாபனங்களின் சம்மேளனத்தின் உறுப்பினர்களுக்கும் இடையிலான மோதலொன்றைத் தொடர்ந்து, ஐக்கிய தேசியக் கட்சி தலைமை அலுவலகமான "சிறிகொத்தா" தாக்குதலின் கீழ் வந்தது. அரசாங்கத்தின் பிரதான பேச்சாளர் ஒருவரான அமைச்சர் விமல் வீரவன்ஸவின் குடைத் தாபனமொன்றான "தேசிய தாபனங்களின் சம்மேளனத்தினால்" (தே.அ.ச.) தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. தாக்குதலை தே.தா.ச. ஆதரவாளர்கள் ஆரம்பித்த போது அவர்களுக்கு எதிராக ஏதாவது நடவடிக்கையை பொலிஸ் எடுக்கவில்லை என CaFFE குறிப்பிட்டிருந்தது. (CaFFE / CMEV / http://www.asianmirror.lk/news/item/5898-caffe-condemns-the-attack-on-sirikotha)



தாக்குதல் நடத்தியோர் மரப்பொல்லுகளுடன் ஆயுதபாணிகளாக விளங்கினர் (Photo: CMEV)

**54.** 23 டிசம்பர் 2014: **ஐ.தே.க. கட்சி அலுவலகம் தாக்கப்பட்டது**
புத்தளம் மாவட்டம், ஆனமடுவவின் ஆடிகம மற்றும் பாலம செருகலே ஆகியவற்றில் புதிதாகத் திறக்கப்பட்ட ஐ.தே.க.வின் இரு தேர்தல் அலுவலகங்கள் 23 அன்று தாக்கப்பட்டன. பாரளுமன்ற உறுப்பினர் ரங்கே பண்டாரவின் கூற்றுப்படி, ஐக்கிய பொதுசன சுதந்திர முன்னணி (ஐ.பொ.சு.மு.) வட மேல் மாகாண சபை உறுப்பினர் திரு.சனத் நிஷாந்தவின் ஆதரவாளர்களைக் கொண்ட குழுவினால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. (CMEV)

**55.** 08 டிசம்பர் 2014: **கட்சி மாறிய ஐ.பொ.சு.மு. ஆதரவாளரின் வீட்டின் மீது குண்டுத் தாக்குதல்**
ஐ.பொ.சு.மு. ஆதரவாளர் ஜி.பி.எச்.என்.சரத் ரத்னசிறியின் வீடு மீது குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. பொது வேட்பாளரின் சகோதரரை அவர் கடந்த வாரம் சந்தித்து, திரு.சிறிசேனவுக்கான ஆதரவை உறுதிப்படுத்தினர். தாக்குதலினால் வீடு சேதமடைந்ததுடன், வீட்டின் அருகில் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட குண்டிலிருந்து துணிக்கைகள் கண்டுபிடிக்கப்பட்டன. (CaFFE)



வீட்டின் மீதான குண்டுத் தாக்குதல் (Photo: CaFFE)

**56.** 07 டிசம்பர் 2014: **கட்சி மாறிய ஐ.பொ.சு.மு. பாராளுமன்ற உறுப்பினரின் வாகனம் மீது கல்லெறியப்பட்டது**

ஐ.தே.க.வுக்கு கட்சி மாறிய பாராளுமன்ற உறுப்பினர் ஹுனெயிஸ் பாரூக்கின் வாகனம் மீது டிசம்பர் 07 மாலை வேளையில் கல்லெறியப்பட்டது. இச் சம்பவம் பொரளையில் மோட்டார் சைக்கிளொன்றுடன் அவரது வாகனம் மோதிய பின்னர் இடம்பெற்றது. இது அரசியல்ரீதியில் செயல்நோக்கமளிக்கப்பட்டதல்ல எனப் பொலிசார் வலியுறுத்தியுள்ளனர். (CaFFE)

**57.** 29 நொவம்பர் 2014: **பொது வேட்பாளரின் சகோதரருக்கு சொந்தமான லொறிகள் தாக்கப்பட்டன**

பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் சகோதரரான டட்டி சிறிசேனவுக்கு உரிமையான "அரலிய சஹலுக்குச்" சொந்தமான லொறியொன்று மரந்தகஹமுல்லவில் தாக்கப்பட்டது. நாட்டின் அரிசி விநியோக மையமான மரந்தகஹமுல்லவுக்கு அரிசியை லொறி ஏற்றிஇறக்கியது. லொறியின் சாரதியும், சுத்திகரிப்பாளரும் மோட்டார் சைக்கிள் ஓட்டி வந்த கும்பலொன்றினால் தாக்கப்பட்டனர்.

(http://www.asianmirror.lk/news/item/5321-maithri-s-brother-dudley-sirisena-s-lorry-attacked-in-marandagahamula)

டட்லி சிறிசேனவின் அரலிய குழுமத்திற்குச் சொந்தமான அரிசி ஏற்றிஇறக்கும் இன்னொரு லொறியை அடையாளம் காணமுடியாத குழு நிறுத்தி, அதன் சாவிகளைக் கொண்டு சென்றதாக பீ.பீ.சி. சிங்கள சேவை அறிக்கையிட்டிருந்தது.

(http://www.bbc.co.uk/sinhala/sri_lanka/2014/11/141129_maithree_attack_dudley)

## ஈ. ஒன்று கூடுவதற்கான சுதந்திரத்தையும், கருத்துச் சுதந்திரத்தையும் மீறுதல்

**58.** 08 ஜனவரி: **ஐ.தே.க.வுக்கான கூட்ட மைதானமொன்றை தயார்படுத்திய வேளை துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம்**

பொது ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன உரையாற்றவிருந்த கூட்டமொன்றுக்காக மைதானத்தை தயார்படுத்திக்கொண்டிருந்த ஐக்கிய தேசியக் கட்சி (ஐ.தே.க.) ஆதரவாளர்கள் அடையாளங் காணமுடியாத குழுவொன்றினால் சுடப்பட்டார்கள். பொலிஸ் பொறுப்பதிகாரி எல்.பி.கே.ராஜமந்திரியின் கூற்றுப்படி, டி.ஐ.டபிள்யு.கருணாதாச ரணசிங்க, எச்.ஹூசேன் துல்ஷான் மற்றும் சாந்த தொடங்கொட ஆகிய காயமடைந்த மூன்று பேரும் இரத்தினபுரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றனர். (CMEV)

**59.** 02 ஜனவரி: **பொது வேட்பாளரின் கூட்டம் தாக்கப்பட்டது**

பெல்மதுளை டிப்போவின் அருகில் பொது ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவினால் நடத்தப்பட்ட பொதுக் கூட்டமொன்று இரவு 7.20 மணியளவில் தாக்குதலின் கீழ் வந்தது. சப்ரகமுவ மாகாண சபை உறுப்பினர் மஞ்சுள டயஸ் விக்ரமநாயக்கவின் உரை முடிவடைந்தவுடன், திரு.சிறிசேனவை நோக்கி தாக்குதல் நடத்தியோர்களினால் கற்கள் எறியப்பட்டன. அவர் உடனடியாக பாதுகாப்பு அலுவலர்களினால் அங்கிருந்து அகற்றப்பட்டார். பெல்மதுளை தேர்தல் தொகுதி அமைப்பாளர் எச்.டி.டி.செனவிரத்ன காயமடைந்ததுடன், அவர் பின்னர் பெல்மதுளை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார் வைத்தியசாலையில் திரு.செனவிரத்ன அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், அவருக்கு தலையில் சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் பெல்மதுளை ஆதார வைத்தியசாலை மருத்துவப் பொறுப்பதிகாரி டாக்டர் வருண சம்பத் உறுதிப்படுத்தினார். (CMEV)

**60.** 29 டிசம்பர் 2014: **இளம் கலைஞர்கள் தாக்கப்பட்டனர்**

குருநாகலைச் சேர்ந்த கும்புக்கேட்டில் ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவாக பிரச்சாரமொன்றை நடத்திய வேளை, அரசியல் குண்டர்களினால் சில இளம் கலைஞர்கள் தாக்கப்பட்டார்கள். மக்கள் மத்தியில் துண்டுப்பிரசுரங்களை விநியோகித்த வேளையில் தாம் தாக்குதலின் கீழ் வந்ததாக "அலுத் பரபுர" என்ற இளம் கலைஞர் கூட்டின் பேச்சாளர் உடுகல் பிரேமரத்ன தெரிவித்தார். பொலிஸ் அலுவலர்களின் முன்னிலையில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது எனவும், தாக்குதலைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார். "காலை 11.30 மணியளவில் நாம் கும்புக்கேட்டில் துண்டுப்பிரசுரங்களை விநியோகித்துக் கொண்டிருந்தோம். ஒரு மணித்தியாலத்தின் பின் அங்கு வந்த சில குண்டர்கள் எம்மை தாக்கினார்கள். நடிகை சமனலி பொன்சேகா மற்றும் பாடகி இந்திரசப்பா லியனகே ஆகியோர் காயமடைந்தனர்" என அவர் தெரிவித்தார். நடைமுறையிலான அரசியல் முறைமைக்கு எதிராக இளம் கலைஞர்களைக் கொண்ட குழுவொன்றினால் "அலுத் பரபுர" அமைக்கப்பட்டது. அவர்கள் 29ஆம் திகதியன்று குருநாகலில் இருந்து தமது பிரச்சாரத்தை ஆரம்பித்திருந்தனர்.

http://www.dailymirror.lk/59937/young-artistes-supporting-ms-attacked

**61.** 28 டிசம்பர் 2014: **தே.ஜ.மு. மீது துப்பாக்கிச் சூடு**

இதேவேளை, டிசம்பர் 28 காலை 1.30 மணியளவில் வலஸ்முல்லவில் சிறிசேனவின் டிசம்பர் 27 கூட்டத்திற்காக கட்டப்பட்ட மேடையொன்றின் மீது துப்பாக்கிச் சூடுகள் நடத்தப்பட்டன. (CaFFE)

**62.** 27 டிசம்பர் 2014: **ஐ.தே.க. கூட்டம் மீது கல்லெறியப்பட்டது**

பொது எதிரணி வேட்பாளருக்கு ஆதரவாக அக்கரைப்பற்றில் நடத்தப்பட்ட ஐ.தே.க. கூட்டமொன்றின் மீது இரவு 7 மணிக்கும், 8 மணிக்கும் இடையில் இரு தடவைகள் கற்கள் வீசப்பட்டன. எதிர்க்கட்சித் தலைவர்

விக்ரமசிங்க உரையாற்றும் போது கற்கள் வீசப்பட்டதுடன், ஒரு கல் 'மைக்ரோபோனைத்' தாக்கியது. எனினும், அவர் தனது உரையைத் தொடர்ந்தார். (CaFFE)

**63.** 27 டிசம்பர் 2014: **தே.ஜ.மு. மீது துப்பாக்கிச் சூடு**

வலஸ்முல்லவில் டிசம்பர் 27 அன்று தே.ஜ.மு. கூட்டத்திற்காகக் கட்டப்பட்ட மேடையொன்றின் மீது துப்பாக்கிச் சூடுகள் நடத்தப்பட்டன. (CaFFE)

**64.** 24 டிசம்பர் 2014: **தே.ஜ.மு. மீது துப்பாக்கிச் சூடு**

டிசம்பர் 23 அன்று 11.30 மணியளவில் 'டிப்பென்டர்' வாகனம் ஒன்றிலும், 'வேன்' ஒன்றிலும் வந்த துப்பாக்கிதாரிகளைக் கொண்ட குழு இரு சுடுகலன்களைப் பயன்படுத்தி சுட்டதாக கொலன்னாவை ஐ.தே.க. அமைப்பாளரும், மாகாண சபை உறுப்பினருமான எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார். (CMEV)

**65.** 24 டிசம்பர் 2014: **தே.ஜ.மு. மீது துப்பாக்கிச் சூடு**

கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த உமகிரிய விளையாட்டு மைதானத்தில் பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் கூட்டமொன்றுக்காக தயாரிக்கப்படும் நிலையில் இருந்த மேடையொன்றும், கூட்டப் பகுதியும் 24ஆம் திகதியன்று ஒரு குழுவினரால் தாக்கப்பட்டது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சுவரொட்டிகளை எடுத்துக்காட்டும் இரு 'ஜீப்'களும், ஒரு 'வேனும்' அங்கு வந்து, வெல்லம்பிட்டிய பொலிஸ் நிலையத்திற்குச் சொந்தமான 'ஜீப்'பொன்றுக்கு அடுத்ததாக நிறுத்தப்பட்டன. வாகனங்களின் ஒன்றிலிருந்து ஆயுதபாணியிலான தனிப்பட்ட ஒருவர் கீழே இறங்கி, மேடையினதும், அதன் கூரையினதும் திசையில் சுடுகலனிலிருந்து சுமார் 17 சுற்றுக்கள் சுட்டார். மக்களைக் கொண்ட குழுவொன்றுடன் சேர்ந்து மேடையைத் தயார்படுத்திக் கொண்டிருந்த வெல்லம்பிட்டிய பொலிஸ் நிலையத்தின் சப்-இன்ஸ்பெக்டரும், வேறு ஒன்பது பொலிஸ் அலுவலர்களும் தப்புவதற்காக ஓட வேண்டியிருந்தது. (CMEV)

**66.** 22 டிசம்பர் 2014: **ராஜபக்ஷ எதிர்ப்பு வீதி நாடக குழு மீது தாக்குதல்**

ஹம்பாந்தோட்டையில் "வீதியே விரோதய" என்ற வீதி நாடகக் குழு உட்பட எதிரணிச் செயற்பாட்டாளர்கள் ஹம்பாந்தோட்டை மேயர் எராஜ் ரவீந்திர பெர்னாண்டோவின் தலைமையிலான குண்டர்களினால் தாக்கப்பட்டனர். பெர்னாண்டோ ஆயுதபாணியாக விளங்கியதாகவும், "வீதியே விரோதய"வின் தலைவர்களில் ஒருவரான ஜயதிலக்க பண்டாரவை அவர் கடத்துவதற்கு முற்பட்டதாகவும் அறிக்கைகள் இருந்தன. (CaFFE)



பாடகரும், மனித உரிமைக் காவலருமான ஜயதிலக்க பண்டார தாக்கப்பட்ட பின்னர் சகபாடிகள் அவருக்கு உதவியளிக்கின்றனர்.

**67.** 21 டிசம்பர் 2014: **கூட்டத்தை தயார்படுத்திய தே.ஜ.மு. கட்சி ஆதரவாளர்கள் தாக்கப்பட்டனர்**

டிசம்பர் 24 அன்று வெல்லம்பிட்டியில் பொது எதிரணி வேட்பாளரின் கூட்டத்தை அறிவிப்பதற்காக டிசம்பர் 21 அன்று சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்த தே.ஜ.மு. ஆதரவாளர்களின் குழுவொன்று வெள்ளை 'வேன்' ஒன்றில் வந்திறங்கிய குழுவொன்றினால் தாக்கப்பட்டது. தாக்குதல் நடத்தியோர் ஆயுதபாணிகளாக விளங்கியதுடன், கூரிய பொருளொன்றினால் குத்தப்பட்ட இருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். (CaFFE)

**68.** 18 டிசம்பர் 2014: **வந்துரம்பவில் தே.ஜ.மு. மேடை எரிக்கப்பட்டது**

கூட்டமொன்றுக்காகவும், பொது அறிவித்தல் முறைமைக்காகவும் பொது வேட்பாளர் சிறிசேனவின் ஆதரவாளர்களினால் காலி மாவட்டத்தில் வந்துரம்ப தேர்தல் தொகுதியைச் சேர்ந்த பத்தேகமவில் அமைக்கப்பட்ட மேடை அரசாங்க அரசியல்வாதியொருவரின் தலைமையிலான கும்பலினால் தீயிடப்பட்டது.

(CaFFE / https://www.ceylontoday.lk/51-80210-news-detail-maithris-wanduramba-election-stage-attacked.html)




டிசம்பர் 18 அன்று வந்துரம்பவில் எதிரணிக் கூட்டத்திற்காக உருவாக்கப்பட்ட மேடை அரசாங்க அரசியல்வாதியின் தலைமையிலான கும்பலொன்றினால் தீயிடப்பட்டது (Photo: Internet)

**69.** 16 டிசம்பர் 2014: **தே.ஜ.மு. மேடை தாக்கப்பட்டது**

டிசம்பர் 16 இரவு அன்று அஹங்கமவில் குழுவொன்று வந்திறங்கி, தே.ஜ.மு. கூட்டத்தின் மேடையின் அலங்காரங்களை அழித்தது. மேடையை அலங்கரித்தவர்களைப் பொலிஸ்காரர்களைக் கொண்ட குழுவொன்று அச்சுறுத்தியதாக ஐ.தே.க.வின் முன்னாள் தென் மாகாண சபை உறுப்பினர் மைத்திரி குணரத்ன தெரிவித்தார். (CaFFE)

**70.** 09 டிசம்பர் 2014: **தே.ஜ.மு. கூட்டமொன்றை நடத்தியதிற்காக 'ஹொட்டேல்' மீது தாக்குதல்**

டிசம்பர் 9 அன்று கூட்டமொன்றை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க நடத்திய கண்டி, பள்ளதலவின்னவில் உள்ள 'ஹொட்டேல்' ஒன்று 'டிப்பென்டர்' 'ஜீப்'களில் வந்திறங்கிய குழுவொன்றினால் நாசமாக்கப்பட்டன. 21 அறைகளின் யன்னல்கள் உடைந்துள்ளன. (CMEV)

**71.** 08 டிசம்பர் 2014: **கூட்டமொன்றாக தயார்படுத்திய தே.ஜ.மு. ஆதரவாளர்கள் தாக்கப்பட்டனர்**

கண்டியில் டிசம்பர் 9 கூட்டத்தை அறிவிக்கும் சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்த தே.ஜ.மு. ஆதரவாளர்களின் குழுவொன்று டிசம்பர் 8 அன்று கடுகண்ணாவையில் தாக்கப்பட்டது. தாக்குதலை அண்ணளவாக 30 பேர் மேற்கொண்டதுடன், முன்னாள் ஐ.தே.க. மாகாண சபை உறுப்பினர் ஜயவீர பண்டார காயமடைந்தார். (CaFFE)

**72.** 08 டிசம்பர் 2014: **ராவய செய்திப்பத்திரிகை ஆசிரியர் விசாரிக்கப்பட்டார்**

திரு.மைத்திரிபால சிறிசேன 59% கொண்ட வாக்குகளை பெறும் அதேவேளை, திரு.மகிந்த ராஜபக்ஷ 41% கொண்ட வாக்குகளை மட்டுமே பெறுவார் என்பதை எடுத்துக்காட்டும் அரசாங்கப் புலனாய்வுச் சேவைகளிலிருந்து தகவலைக் குறிப்பிடும் செய்தியொன்றை வெளியிட்டமை பொலிஸ் புலனாய்வுச் சேவைகள் பிரிவின் முன்னாள் தலைவர் சந்திரா வாகிஸ்த மீதான தனிப்பட்ட தாக்குதலொன்று எனச் சார்த்துரைத்து, குற்றவியல் விசாரணைக் பிரிவுக்கு "ராவய" செய்திப்பத்திரிகையின் பிரதம ஆசிரியரும், சட்டத்தரணியுமான கே.டபிள்யு.ஜனரஞ்சன அழைக்கப்பட்டிருந்தார். செய்தி விடயமானது திரு.சந்திரா வாகிஸ்தவுக்கு அல்லது பொலிஸ் திணைக்களத்திற்கு ஏதேனும் அவமரியாதையைச் செய்திருக்கவில்லை. (http://www.lankatruth.com/home/index.php?option=com_content&view=article&id=7950:ravaya-editor-called-to-cid&catid=36:top-stories&Itemid=124)



ராவய ஆசிரியர் ஜனரஞ்சன விசாரிக்கப்பட்டார் (Photo: Internet)

**73.** 06 டிசம்பர் 2014: **முன்னாள் ஜனாதிபதி தாக்கப்பட்டார்**

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவையும், மாகாண சபை உறுப்பினர் செல்வி ஹிருணிகா பிரேமசந்திரவையும் ஐக்கிய பொதுசன சுதந்திர முன்னணியின் (ஐ.பொ.சு.மு.) ஆதரவாளர்கள் தாக்கியுள்ளனர். பொது எதிரணி வேட்பாளர் சிறிசேனவுக்கு ஆதரவாக பேருவளைப் பட்டினத்தில் நடந்த கூட்டமொன்றின் பின்னர் மாகாண சபை உறுப்பினர் மொஹமட் ஜெமின் மரிக்கார் மொஹமட் இஸ்திகாரின் வீட்டுக்கு இராப்போசனத்திற்காக ஜனாதிபதி குமாரதுங்கவும், செல்வி பிரேமசந்திரவும் சென்றிருந்தனர். இராப்போசனத்தின் போது, ஒரு குழுவினர் கூச்சலிட்டதுடன், வீட்டின் மீது கல்லெறிந்துமுள்ளனர். தமது பாதுகாப்பு அலுவலர்களினதும், பொது எதிரணி வேட்பாளரின் ஆதரவாளர்களினதும் ஆதரவுடன் ஜனாதிபதி குமாரதுங்கவும், செல்வி பிரேமசந்திரவும் வீட்டைவிட்டு வெளியேறினார்கள். (CMEV)

**74.** 06 டிசம்பர் 2014: **ராஜபக்ஷ அரசாங்கத்தை விமர்சித்த இதழியலாளர் அச்சுறுத்தப்பட்டார்**

ராஜபக்ஷ அரசாங்கத்தின் போது ஊடகங்களின் அடக்குமுறையையிட்டு வாய்மொழியாக விமர்சித்த ஊடகப் போராட்டமொன்றில் பங்கெடுப்பதற்காக கொழும்புக்கு பிரயாணம் செய்த போது சிரேஷ்ட இதழியலாளரும், யாழ்ப்பாண ஊடக சங்கத்தின் ஆலோசகருமான ஆர். தயாபரன் அறியப்படாத தொலைபேசி இலக்கங்கள் ஊடாக அச்சுறுத்தப்பட்டார். தற்போது சில காலமாக இராணுவப் புலனாய்வு அலுவலர்களினால் திரு.தயாபரன் தொந்தரவு செய்யப்பட்டார்.

**75.** 05 டிசம்பர் 2014: **ராஜபக்ஷ எதிர்ப்பு வீதி நாடகக் குழு தாக்கப்பட்டது**

டிசம்பர் 05 அன்று எப்பவலவில் "வீதியே விரோதய" குழு தாக்கப்பட்டது. வட-மத்திய மாகாண முதலமைச்சர் எஸ்.எம்.ரஞ்ஜித் சமரக்கோனின் ஆதரவாளர்களினால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக குழுவின் உறுப்பினர்கள் வலியுறுத்துகின்றார்கள். (CaFFE)

**76.** 05 டிசம்பர் 2014: **ஐ.பொ.சு.மு. ஆதரவாளர்களால் இதழியலாளர் தாக்கப்பட்டு, அச்சுறுத்தப்பட்டார்**

நல்லாட்சி மீது வீதி நாடகமொன்றை மேடையேற்றும் குழுவொன்றைச் சம்பந்தப்படுத்தும் சம்பவமொன்றையிட்டு செய்தி சேகரித்த வேளை 05ஆம் திகதியன்று ஹிரு தொலைகாட்சியினதும், "அத" செய்திப்பத்திரிகையினதும் அனுராதபுரம் பிராந்திய நிருபர் திஸார சமல் சோமரத்ன தாக்கப்பட்டார். வட மத்திய மாகாண (வ.ம.மா.) முதலமைச்சர் எஸ்.எம்.ரஞ்ஜித் சமரக்கோனின் ஆதரவாளர்களே தன்னை அச்சுறுத்தியவர்கள் என அவர் அடையாளம் கண்டுள்ளர். எப்பாவல வைத்தியசாலையில் தாக்குதல் காயங்களுக்காக அவர் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த வேளை, வைத்தியசாலைக்கு வந்திறங்கிய ஆண்களின் குழுவொன்றினால் அவர் அச்சுறுத்தப்பட்டார். "வைத்தியசாலையை விட்டு வெளியே செல்லுமாறும், அல்லது என் முன்னிலையில் எனது பெற்றோரை தாம் கொல்லப்போவதாகவும் அவர்கள் என்னிடம் கூறினார்கள்" என அவர் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

(http://www.sundaytimes.lk/141207/news/journalist-allegedly-assaulted-by-upfa-supporters-threatened-in-hospital-131557.html)

**77.** 25 நொவம்பர் 2014: **ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினரின் கட்சி அலுவலகம் மீது துப்பாக்கிச் சூடு**

கண்டி, மாவில்மடுவில் தினத்தின் அதிகாலை வேளையில் ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் எம்.எம்.எ.ஹலிமின் அலுவலகத்தின் மீது துப்பாக்கிச் சூடுகள் நடத்தப்பட்டன. அலுவலகத்தின் யன்னல்களும், சுவர்களும் சேதமடைந்தன. பொது வேட்பாளர் திரு.சிறிசேனவை ஹலீம் தீவிரமாக ஆதரித்து வந்தார். (CaFFE)

**78.** 23 நொவம்பர் 2014: **ஐ.தே.க. ஆதரவாளர்களின் வீடுகள் தாக்கப்பட்டன**

மாதம்பே, மெதகமவில் மில்ரன் என்ற பெயரிலான ஐ.தே.க.வின் தீவிர ஆதரவாளர் ஒருவரின் வீடு நள்ளிரவுக்கு பின்னர் இரு தடவைகள் தாக்கப்பட்டன. மெதகம, இரண்டாவது ஒழுங்கையில் சுதே பிரியங்கரவின் வீடும் தாக்கப்பட்டது. பொது எதிரணி வேட்பாளராகப் போட்டியிடுவதற்கான தனது நோக்கத்தை முன்னாள் ஸ்ரீ.ல.சு.க. செயலாளர் மைத்திரிபால சிறிசேன அறிவித்த பின்னர் அவர்கள் இருவரும் வெடிகளைக் கொளுத்தினார்கள். அதிகாலை 12.20 மணியளவில் மோட்டார் சைக்கிள்களில் வந்திறங்கிய ஒரு குழுவினர் துப்பாக்கிச் சூடுகளை நடத்தினர் என திரு.மில்ரன் தெரிவித்தார். அவர்கள் வெளியேறிய பின்னர் வீட்டின் குடியிருப்பாளர்கள் வீட்டை விட்டு வெளியே வந்த போது, ஒரு மோட்டார் சைக்கிள் திரும்பிவந்து, துப்பாக்கிச் சூடுகள் நடத்தப்பட்டன.

(CaFFE/ http://www.asianmirror.lk/news/item/5321-maithri-s-brother-dudley-sirisena-s-lorry-attacked-in-marandagahamula)

## உ. வாக்குச்சாவடி முகவர்களுக்கும், தேர்தல் கண்காணிப்பாளர்களுக்கும் தாக்குதல்கள், அச்சுறுத்தல்கள் மற்றும் கட்டுப்பாடுகள்

**79.** 08 ஜனவரி: **வாக்குச்சாவடி முகவர்கள் தாக்கப்பட்டனர்**

கம்பளையில் மலை ஆலயக் கட்டிட வாக்குச்சாவடியில் கடமையில் இருந்த மூன்று வாக்குச்சாவடி முகவர்கள் ஐக்கிய பொதுசன சுதந்திர முன்னணியின் (ஐ.பொ.சு.மு.) நகர சபை உறுப்பினர் தர்ஷன நயனதரங்கவினாலும், அவரது ஆதரவாளர்களினாலும் தாக்கப்பட்டனர். வாக்கு எண்ணும் நிலையங்களுக்கு வாக்குப் பெட்டிகள் கொண்டு செல்வதற்கு தயார் செய்யப்பட்ட பின்னர் எஸ்.ஜி.எச்.எம்.ஜயலால், எஸ்.எல்.பண்டார மற்றும் எஸ்.பிரசாத் குமார் ஆகிய மூன்று தனிப்பட்டவர்கள் தாக்கப்பட்டனர். (CMEV)

**80.** 08 ஜனவரி: **தேர்தல் கண்காணிப்பாளருக்கு மரண அச்சுறுத்தல்**

CMEV கண்காணிப்பாளர் ஆர்.எஸ்.எஸ்.தொரகமுவை ஐ.பொ.சு.மு. பிரதேச சபை அமைச்சர் நிமால்சிறி தொலைபேசி அழைப்பொன்றின் ஊடாக அச்சுறுத்தியுள்ளார். ஜனவரி 9 அன்று அவரது கைகளையும், கால்களையும் உடைத்து, கொலை செய்வேன் என நிமால்சிறி அச்சுறுத்தியுள்ளார். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவளிக்காததிற்காகவும், தேர்தல் கண்காணிப்பில் அவரது சம்பந்தத்தின் காரணத்திற்காகவும் CMEV கண்காணிப்பாளருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது. (CMEV)

**81.** 30 டிசம்பர் 2014: **தேர்தல் கண்காணிப்பாளர் தாக்கப்பட்டார்**

ஒருவருக்கொருவர் மிகக் கிட்டியதாக இரு தரப்புக்களினாலும் மேற்கொள்ளப்பட்ட தேர்தல் பிரசாரத்தையும், இரு குழுக்களுக்கிடையிலான மோதலையும் புகைப்படமெடுப்பதற்கு முயன்ற போது CMEV கண்காணிப்பாளர் ஜே.பி.எ.எம். ஜயசேகர தாக்கப்பட்டார். இம் மோதலைத் தொடர்ந்து இரு சம்பவங்கள் நடந்ததுடன், இவற்றில் CMEV கண்காணிப்பாளர் அச்சுறுத்தப்பட்டு, தாக்கப்பட்டார். பொலன்னறுவை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜி.எ.என்.எல்.விஜேசேனவுடன் பொலிஸ் முறைப்பாடொன்று செய்யப்பட்டுள்ளது. (CMEV)